பக்கங்கள் 06

விலை ரூபா 5-00

# ஐக்கியதீபம்

திங்கள் AIKIYATHEEPAM. இதழ்

வான் சிறப்பு

வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான் அமிழ்தம் என்றுணரற் பாற்று. 11

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூ உம் மழை. 12

விண் இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உள்நின்று உடற்றும் பசி. 13

ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால். 14

கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
எடுப்பதூ உம் எல்லாம் மழை. 15

யா. மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல்
நுகர்ச்சி கூட்டுறவு சங்கங்களின் சமாசம்,
இலக்கம். 11, பிரதான விதி, யாழ்ப்பாணம்.

தீபம் : 43 ஒக்டோபர் - 199 ஒளி : 7

யாழ் மாவட்ட கூட்டுறவு நிறுவனங்களுக்கான ——

# 33 கோடி ரூபா இழப்பீட்டுத் தொகையை புனர்வாழ்வு அமைச்சிடம் பெற்றுத் தருக!

**கூட்டுறவு அமைச்சரிடம் யாழ். மா. கூட்டுறவுசபை வேண்டுகோள் :**

*“ஸ்ரீலங்காவில் தமிழ் மக்களுக்கெதிராக நடாத்தப்பட்டுவரும் நீண்டகால யுத்தத்தினால் யாழ். மாவட்ட கூட்டுறவு நிறுவனங்கள் சொத்துக்களாகவும், நுகர்பொருட்களாகவும் இழந்த முப்பத்துமூன்றரைக்கோடி ரூபாவினை இழப்பீட்டுத் தொகையாகப் பெற்றுத்தருவதுடன்; உணவுத் திணைக்களம், கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையம், பெற்றோலியக் கூட்டுத்தாபனம்போன்ற திணைக்களங் களை மீண்டும் யாழ். மாவட்டத்தில் இயங்கவைத்து அவற்றின்மூலம் பல. நோ. கூ. சங்கங்கள் அத்தியாவசிய உணவுப்பொருட்களை இலகுவில் பெற்றுக்கொள் ளவும், வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட கூட்டுறவு ஊழியர்களுக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு நட்டஈடு வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.”*

இவ்வாறு கோரும் மகஜர் ஒன்றை உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், கூட்டுறவு அமைச்சர் அமரசிறி தொடங் கொடவிற்கு யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத்தலைவர் திரு. வே செந்திநாதன் அனுப்பிவைத்துள்ளார். இம் மகஜரின் பிரதி பிரதமர் சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரரணதுங்காவிற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது

அம்மகஜரில் மேலும் குறிப் பிடப்பட்டிருப்பதாவது.

நீண்ட காலமாக தமிழ் மக் களுக்கு எதிராக முன்னைய அரசு நடாத்திவந்த போரி னால் யாழ். மாவட்டத்தில் உள்ள பல்வேறு வகையான கூட்டுறவு நிறுவனங்களின் 33½ கோடி ரூபா பெறுமதிவாய்ந்த சொத்துக்களும் நுகர்ச்சிப் பொருட்களும் சேதமடைந் துள்ளன. இதனால் அவை பாரியநிதி நெருக்கடி காரண மாக மக்களின் சேவைகளை முன்னெடுத்துச்செல்ல முடியா துள்ளது. எனவே இவ்விழப் பீட்டுத்தொகையைபுனர்வாழ் வு புனர் நிர்மாணத்திணைக் களத்திடம் இருந்து உடனடி யாக பெற்றுத்தரவும்.

யாழ். மாவட்டத்தில் உண வுத் திணைக்களம் கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையம் பெற்றோலியக் கூட்டுத்தாப னம் ஆகியவற்றை மீண்டும் இயங்க வைப்பதன் மூலம் ப. நோ. கூ. சங்கங்களுக்கு பணத் திற்கும், குறுகிய காலக் கடன டிப்படையிலும் அத்தியவா சிய உணவு, மற்றும் எரி பொருட்களை வழங்கவும்.

யாழ். செயலக புனர்வாழ் வுப்பகுதியினரால் சங்கங்க ளுக்கு வழங்கப்படும் பொருட் களுக்கான கூலிகள் அதிகமாக இருப்பதால் இச்சுமை பாவ னையாளர்மீதே சுமத்தப் டு கிறது, எனவே இக்கூலிகளை அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும்.

நட்டஈடு :

வன்செயல்களினால் பாதிக் கப்பட்ட அரச, கூட்டுத்தாபன ஊழியர்களின் சொத்து இழப் பீடுகளுக்கு நட்டஈடு வழங்கி வருவதுபோல் மக்கள் சேவை யில் தம்மை அர்ப்பணித்த கூட்டுறவு ஊழியர்களுக்கு ஏற் பட்ட இழப்புகளுக்கும் நட்ட ஈடுவழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## சங்க உபவிதிக்கேற்ப கி. குழு தேர்தல்நடைபெறவேண்டும்

“சட்டப்படியான கிளைக் குழுத் தேர்தல்களைப் பின் போடுதல் கூட்டுறவுக் கொள் கைகளுக்கும், சட்ட விதிகளுக் கும் முரணான செயலாகும்”

இவ்வாறு கூறும் சுற்றுநிருப மொன்றினை பல. நோ. கூ. சங்கங்களின் தலைவர்களுக் கும், வடகிழக்கு மாகாண கூ. அபிவிருத்தி ஆணையாளர் திரு க. சபாபதிப்பிள்ளை அனுப்பிவைத்துள்ளார்.

அச்சுற்றுநிருபத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது; வடக்குக்கிழக்கிலுள்ள சில ப. நோ. கூ. சங்கங்கள் கடந்த காலங்களில் ஏற்பட்ட அசம் பாவித நிலமையினைக் கார ணங்காட்டி நீண்டகாலமாகச் சட்ட ஏற்பாட்டின்கீழ் நடத் தப்பட வேண்டிய கிளைக் குழுத் தேர்தல்களை நடத்தா மலும், பொதுச்சபை மூலம், நெறியாளர்களைத் தெரிவு செய்யாமல் இருப்பதினாலும் பல பிரச்சனைகளை சங்கங் கள் எதிர்நோக்குகின்றன.

சங்க உபவிதி ஏற்பாடுக ளுக்கமைய பொதுச்சபையின் முக்கியத்துவத்தை உணர்ந்து கிளைக்குழுத் தேர்தல்களை உடனடியாக நடாத்த நடவ டிக்கை மேற்கொள்ள வேண் டும்.

## மா, ம. எண்ணை விலை குறைப்பு 13 லட்சரூபா நட்டம்

அரசாங்கம் அண்மையில் மாவுக்கும், மண்ணெண்ணைக் கும் விலைகுறைப்புச் செய்த தினால் யாழ். மாவட்டத்தில் உள்ள ப. நோ. கூ. சங்கங்க ளுக்கு சுமார் பதின்மூன்று லட்சரூபா நட்டமேற்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந் நட்டத்தை அரசிடம் இருந்து பெற்றுத்தருமாறு யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை யாழ். அரச அதிபரை யும் திட்டப்பணிப்பாளரையும் கேட்டுள்ளது.

## கொழும்பு விலையில் பாவனைப் பொருள் வழங்க ஏற்பாடு !

யாழ்ப்பாணத்தில் உள்ள சகல ப நோ கூ சங்கங்க ளுக்கும் கொழும்பு விலையில் உணவுப்பொருட்கள் மக்களுக் குக் கிடைக்கக்கூடியதாக கூட் டுறவு மொத்த விற்பனைத் திணைக்களம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

அரச சமாதானக் குழுவில் யாழ். வந்த இலங்கை வங்கித் தலைவர் திரு. ராஜன் ஆசீர் வாதம் மேற்படி தகவலைத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உடனடி யாக கூ. மொத்த விற்பனைக் கிளையைத் திறப்பதற்கு வசதி கள் இல்லாததினாலேயே இவ் வேற்பாடு செய்யப்பட்டுள்ள தாகவும், கூ. மொத்த விற் பனை நிலையத்திற்குத்தேவை யான கட்டிடம் ஒன்று அமைக் கப்பட்டபின்பே இக்கிளை இயங்கும் என்றும் அவர் கூறி னார்.

## இடப்பெயர்ந்தோர் நிவாரணம மக்கள் அதிருப்தி

செப்ரெம்பர் மாத முதல் இருவாரகால இடம் பெயர்ந் தோர் நிவாரணப் பொருள் பங்கீட்டில், இடம் பெயர்ந் தோர் நிவாரணம் பெறும் மக்கள் அதிருப்தி அடைந்துள் ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நிவாரணப் பொருள் பங்கீட் டில் அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்குப்பதிலாக கூடு தலான சவர்க்கார வகைகள் இடம் பெற்றிருப்பதும், ஆகஸ்ட் மாத நிவாரணத்தி லும் கூடுதல் சவர்க்கார வகை கள் வழங்கப்பட்டிருந்தமை யுமே அதிருப்திக்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

## 100/- அங்கத்தவர்களே பல. நோ. கூ. சங்க தேர்தலில் பங்குபற்ற முடியும்

“புதிய திருத்தச்சட்ட வாக் கத்தின் பிரகாரம் பல நோக் குக் கூட்டுறவுச் சங்கங்களில் 100-/ ரூபா பங்குப்பணம் செலுத்தி அங்கத்தவர்களாகச் சேர்ந்தவர்களே கிளைக்குழுத் தேர்தல்களில் பங்குபற்றி வாக் களிக்கத் தகுதியுடையவர்க ளாவர்.”

இவ்வாறு வடகிழக்கு கூட்டு றவு அபிவிருத்தி ஆணையா ளர் திரு. க. சபாபதிப்பிள்ளை வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள சகல பல நோக்குக் கூட் றவுச்சங்கத் தலைவர்களுக்கும் கடிதமூலம் அறிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது; புதிய சட்ட ஏற்பாடுகளின்படி உபவிதித் திருத்தங்களை மேற் கொள்வதற்கு முன்னர் இத் திருத்தங்கள் பற்றி சகல அங் கத்தவர்கள், நெறியாளர்கள், பணியாளர்கள் ஆகியோருக்கு இத்திருத்தங்கள் பற்றிய அவ சியம்பற்றி போதிய விளக்க மளிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உபவிதித்திருத்தம் 5ம்பக்கம்)

## கூட்டுறவுப் பணியாளர் வாழ்க்கைத் தள்ளுபடி

கூட்டுறவுப் பணியளர்க ளுக்கான வாழ்க்கைத் தள்ளு படி திட்டமொன்றை கூட்டு றவு சங்கங்கள் நடைமுறைப் படுத்தி வருகின்றன.

இத்திட்டத்திற்கு ஊழியர் கள் மாதம் 25 ரூபாவும், சங் கம் 50 ரூபாவும் பங்களிப்புச் செய்ய வேண்டும்.

இத் திட்டத்தின் கீழ் பணி யாளர் ஒருவரின் மரணம் அல்லது அவர் வலுவிழக்கும் போது 5 வருடத்திற்குள் 5000 ரூபா, 10வருடத்திற்குள் 10ஆயிரம்ரூபா, 15வருடத் திற்குள் 15ஆயிரம் ரூபா, 20 வருடத்திற்குள் 20 ஆயிரம் ரூபா, 25 வருடத்திற்குள் 30

(6 ம் பக்கம் பார்க்க)

### சிந்தனைச்சுடர்

காலத்தின் தேவைக்கேற்ப கூட்டுறவுத்துறையின் சட்ட திட்டங்கள் மாற்றப்பட படவேண்டும். அதிலே தான் கூட்டுறவுத்துறையின் உண்மையான வெற்றி அடங்கியுள்ளது.

— அறிஞர் அண்ணா

## ஐக்கிய எண்ணம்

### மர நடுகையும் கூட்டுறவும்

''மரங்களைப் படைக்க வல்லவன் இறைவனே'' என்று ஆங்கில கவிஞன் ஒருவன் பாடினான்.

''கார்த்திகை மாதத்து வளர்பிறையில் அரசு, ஆல், வேம்பு ஒவ்வொன்றும்; விளாத்தி, வில்வம், நெல்லி இவற்றில் மும்மூன்றும், பத்துப் புளி, ஐந்து மா, ஐந்து தென்னை ஆகிய ஒன்பது வகையான மரங்களை தடுபவர்களுக்கு நரக வேதனை இல்லை'' என்று கார்த்திகைப்புராணம் கூறுகிறது.

இறைவன் மட்டுமல்ல மனிதனும் மரங்களை உண்டு பண்ணுவதில் வல்லவன் என்பதை எமது மூதாதையர்கள் அறிந்திருந்தமையால் தான் அன்றே அவர்கள் மரம் நாட்டும் பணியில் ஈடுபட்டு அதில் வெற்றியும் கண்டனர்.

அன்று எமது மூதாதையர்கள் அறிந்துவைத்திருந்த உண்மைகள், இன்று விஞ்ஞானிகளுக்கு தெரிய வந்துள்ளமையால் இயற்கைச் சூழலுக்கும், மனிதனுக்குமிடையே உள்ள நெருங்கிய தொடர்பினை அவர்கள் ஆதார பூர்வமாக நிரூபித்துள்ளனர்.

பலஆண்டுகளாக சுயாட்சி உரிமைகோரி போராட்டம் நடாத்திவரும் நாம், எமது பிரதேசத்தில் உணவில் தன்னிறைவு காணும் வகையில 'உணவு உற்பத்திப்போரில்' ஈடுபட்டிருக்கும் அதே வேளை, அழிந்து போகும் எமதுஇயற்கைவளங்களைப பேணிப பாதுகாத்து பயன் தரும் மரங்களை நடுகை செய்பதிலும ஈடுபடுவது தலையாய கடமையாகும்.

இன்று நாம் தெரிந்தோ தெரியாமலோ பயன்தரு மரங்களைஉடனடித்தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக அனாவசியமாகத்தறிப்பது எம்மை நாமே அழித்துக் கொள்வதற்கு ஒப்பான செயலாகும்.

யாழ்ப்பாணத்தின் பொருளாதார அமைப்பினதும், உறுதிதளராத சமுதாய அமைப்பினதும் சின்னமாக பனைமரம் திகழ்ந்துவருகிறது.

ஸ்ரீலங்காவில் காணப்படும் ஒருகோடி பத்துலட்சம் பனைமரங்களுள் தமிழீழப் பிரதேசங்களில் மட்டும் ஒரு கோடி ஒன்பதுலட்சத்து ஐம்பத்தெண்ணாயிரம் பனைமரங்கள் காணப்படுவதாகப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றது.

பனை மரத்தில் இருந்து உணவு, பிணிதீர்க்கும மருந்து வகைகள் உட்பட 801 வகையான பயன்களை பெறலாம் என பனை ஆராய்ச்சி வல்லுநர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இத்தகைய பயன்களைத் தரும் ''கற்பகதருவை'' ''தெய்வீகதாவரத்தை'', ''பஞ்சம் போக்கி'' யை கற்பகச்சோலைபனம்விதை நடுகைத்திட்டத்தின்மூலம், பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கங்கள், இச்சங்கங்களின் சமாசம் ஆகிய கூட்டுறவுஅமைப்புக்கள் முனைப்புடன் தமிழீழப் பிரதேசங்களில் நடுகை செய்வதில் ஈடுபட்டிருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

பொருளாதார, சமூக முன்னேற்றத்தில் அக்கறையுடன் செயல்பட்டுவரும் கூட்டுறவாளர்களின் இம் முயற்சிபாராட்டற்குரியது.

இத்திட்டத்தில் பெருந் தொகையான பணத்தினையும், மனித சக்தியையும் முதலீடு செய்துள்ள கூட்டுறவாளர்கள், இவை பயன் தரக்கூடிய காலம்வரை அவற்றைப்பராமரித்து அதன் முழுமையான பிரயோசனத்தை மக்கள் அடையச்செய்ய வேண்டிய வழிவகைகளையும் மேற்கொள்ள வேண்டுமென்பதே எமது வேண்டுகோளாகும்.

---

## கூட்டுறவுக் கொள்கைகள்
## கூட்டுறவுக் கல்வி

அனைத்துலக கூட்டுறவு நிறுவனத்தினால் 1966-ல் பிரகடனப் படுத்தப்பட்ட கூட்டுறவுக் கொள்கைகளில் ஐந்தாவதுகொள்கை இங்கு பிரசுரமாகியுள்ளது.

ஆர்

கூட்டுறவுக் கொள்கைகளில் ஐந்தாவது கொள்கை கல்வி அபிவிருத்தியை வலியுறுத்தும் ஒரு முக்கியமான கொள்கை யாகும். ''அனைத்து கூட்டுறவுச் சங்கங்களும் கூட்டுறவுக் கோட்பாடுகள், பொருளாதாரம், ஜனநாயகமுறை என்பன தொடர்பாக அங்கத்தவர்கள், அலுவலர்கள், பொதுமக்கள் என்போருக்கு கல்வியை புகட்டுவதற்கு ஒழுங்குகள் செய்தல் வேண்டும் என்பதே 1966 ல். சர்வதேச கூட்டுறவு அமைப்பினால் பிரகடனப்படுத்தப் பட்ட ஐந்தாவது கொள்கை யாகும்.

இக்கொள்கையில் அனைத்து கூட்டுறவுச் சங்கங்களும் கல்வி அபிவிருத்திக்கும் முக்கியமான பங்களிப்பு செய்தல் வேண்டும் என தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

கூட்டுறவு நிறுவனங்களின் உறுப்பினர்கள், அலுவலர்கள் பொதுமக்கள் ஆகிய அனைவருக்கும் கல்வி புகட்டப்படல் வேண்டும். கூட்டுறவுக் கோட்பாடுகள் ஜனநாயக முறைமை, பொருளாதாரம் என்பன பற்றிய அறிவு புகட்டப்படல் வேண்டும் என்று தெளிவுபடுத்தப் பட்டுள்ளது.

இக்கொள்கையின் சிறப்புத் தன்மைமூலம் கூட்டுறவு என்பது ஒரு தனித்துவமான புனித தன்மையினை கொண்டுள்ளது என்பதை வெளிக் காட்டியுள்ளது. கூட்டுறவில் அங்கத்தவர், அலுவலர் என்போர் நேரடியாக சம்பந்தப் பட்ட இவ்இரண்டு சாராரையும் விட கூட்டுறவு அமைப்புடன் சம்பந்தப்படாத சகல பொதுமக்களுக்கும் கல்விபுகட்டப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்படுகின்றது.

கூட்டுறவு இயக்கத்தை தெரிந்தவர்கள இயக்கத்துக் குள்ளே இருப்பவர்களுக்கு கூட்டுறவுக் கல்வியை புகட்டும் போது அக்கல்வி மூலம் கூட்டுறவு நிறுவனத்தை மேலும் அபிவிருத்தி செய்ய முடியும், அதே வேளையில் கூட்டுறவு என்றால் என்ன ? என்று தெரியாத கூட்டுறவுக்கு வெளியே உள்ளவர்களுக்கும் கல்விபுகட்டப்படுவதன்மூலம், அவர்கள் கூட்டுறவைப்பற்றி தெளிவாக விளங்கிக்கொண்டு அதன் நன்மைகளைப் பெற கூட்டுறவு இயக்கத்துக்குள் வந்து இணைந்துகொள்வார்கள்.

இந்த அடிப்படைக் கருத்தினை மையமாகக் கொண்டு இக்கொள்கை வகுக்கப்பட்டுள்ளது அங்கத்தவர், அலுவலர் பொதுமக்கள் என்போருக்கு என்ன கல்வியை புகட்டல் வேண்டும் என்பதையும் இக்கொள்கை தெளிவுபடுத்தியுள்ளது. வெறுமனே கூட்டுறவுக் கோட்பாடுகளை மட்டும் போதிக்காமல் பொருளாதாரம் சனநாயக முறை போன்றவற்றையும் புகட்ட வேண்டும். முதலில் ஒரு மனிதனுக்கு அத்தியாவசியமான பொருளாதார பிரச்சனையை தெளிவுபடுத்தி அதை கூட்டுறவு முறையில் எவ்வாறு தீர்க்க முடியும் என்பதனை அவனுக்குத் தெளிவுபடுத்துவதன் மூலமே அவனுக்கு கூட்டுறவில் ஒரு ஆர்வத்தை ஏற்படுத்த முடியும்.

கூட்டுறவுக் கல்வி புகட்டும் போது சம்பந்தப்பட்ட தரப்பினர் ஓரளவுக்காவது ஒரு பொதுக்கல்வியைப் பெற்றவர்களாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் இக் கல்வி புகட்டல் நடவடிக்கையை சரிவர முன்னெடுக்க முடியாது. எனவே அவர்களுக்கு முதலில் பொதுக் கல்வியினை ஊட்டி அவர்களை ஒருதராதரத்திற்கு கொண்டுவந்து அதன்பின் இப் பொருளாதரம் ஜனநாயக முறை, கூட்டுறவுக் கோட்பாடுகள் என்பவற்றைப் படிப்படியாக புகட்ட வேண்டும்.

கல்வி மூலம், மக்களின் கல்வித்தரம் உயர்வடைந்து அவர்களது கலைகலாச்சாரம், பண்பாடு என்பன அபவிருத்தியடைந்து வாழ்க்கைத் தரம் உயர்வடைகின்றது. இக் கொள்கையானது வெறுமனே கூட்டுறவு கோட்பாடு தத்துவம் என்பவற்றை மக்களிடையே பரப்பவேண்டுமென்ற குறுகியநோக்கத்தைக் கொண்டாக அமையவில்லை.

வி. கே. சிவராஜசுந்தரம்
கல்வி பயிற்சி அளிப்பு உத்தியோகத்தர்.
யாழ் மா. கூ. சபை.

---

## 20-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கூட்டுறவு வளர்ந்தது

கூட்டுறவென்பது பொருளாதார விருத்தியை நோக்கமாகக் கொண்டு ஒன்று கூடி உழைத்தல் ஆகும் இலங்கையில் கூட்டுறவுஇயக்கம் 1911ம் ஆண்டு சட்ட அமைப்பு மூலம் வேரூன்றி இருந்தாலும், அதற்கு முன்பே பல கூட்டுறவு நாணய சங்கங்கள் வறிய மக்களின் கடன் சுமைகளைக் குறைக்கும்நோக்குடன் 1920ம் ஆண்டில் 154 சங்கங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன.

### கூட்டுறவுச் சட்டங்கள்

1911ம் ஆண்டிற்குப் பின் 1921ம், 1924ம், 1936ம், ஆண்டுகளில் கூட்டுறவுச் சட்டங்கள் காலத்திற்குகாலம், தேவைக்கேற்ப திருத்திஅமைக்கப்பட்டன. 2ம்உலகப்போரின் போது நாட்டில் ஏற்பட்ட உணவுப் பற்றாக்குறையைப் போக்குவதற்காக பண்டகசாலைச் சங்கங்களை நிறுவி பங்கீட்ட டிப்படையில்உணவுத் தேவை பூர்த்தி செய்யப்பட்டது.

1946ம் ஆண்டு விவசாயத்தில் கூடிய கவனம செலுத்தப்பட்டு உற்பத்தி விற்பனவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டன. இதன் மூலம் விவசாயிகளுக்குக் குறைந்த விலையில உரம் விதை உள்ளீடுகள் வழங்கி அறுவடைக்காலங்களில் அவற்றைக் கொள்வனவு செய்து அவற்றுக்கு நல்ல சந்தை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன.

கிராமப்புற மக்கள் மத்தியில் சேமிப்பை ஊக்குவிக்கவும், கடன் வழங்குவதற்கும் ஐக்கிய நாணய சங்கங்களும் உணவுப் பங்கீட்டை செயவதற்கு கூட்டுறவு பண்டகசாலைச் சங்கங்களும், விவசாயிகளுக்கு உதவும வகையில் நாடளாவிய ரீதியில் இரண்டாம் படிச் சங்கங்களும், மாகாண கூட்டுறவு வங்கி வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச்சபை, கடற்றொழிலாளர், கூட்டுறவு சங்க சமாசம், வைத்தியசாலைச் சங்கங்கள், கைத்தொழில் சங்கங்கள் என்பனவும், வாழைக்குலைச் சங்கம், கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கம், என்பனவும் இயங்கி வந்தன.

கூட்டுறவு வரலாற்றில் 1957ல் ஏற்பட்ட மாற்றத்தின் மூலம், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப் பட்டு, அரசாங்கத்தின் கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையத்தின் அனுசரணையுடன் சீராக இயங்கிவந்தன. 1971ம் ஆண்டு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பலவும் ஒன்றிணைக்கப்பட்டு ஆரம்ப சங்கங்களாக உருப்பெற்றன.

இக்காலப் பகுதியில் எமது பொருளாதாரத்துறையில் பெரும்பங்கினை வகித்து வந்த பனை தென்னை வளங்களை ஒருமுகப்படுத்தி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்பெற்றன. இவை ஓர் தொழில் சார்ந்த தொழிலாளர்களைக் கொண்ட சங்கங்களாகும். வறுமைக் கோட்டின் கீழ் வாழுகின்ற இவர்களின் கல்வி முன்னேற்றத்திற்காகவும் இவை உருவாக்கப் பட்டன.

இச் சங்கங்கள் பனை, தென்னை சார்ந்த மதுசாரம் பனை வெல்லம். மென்பானங்கள், பனை ஓலைகளிலான பொருட்களைத் தயாரிப்பதுடன் துறைசார்ந்த அங்கத்தவர்களின பொருளாதாரத்தையும் மேம்படுத்திவருகிறது.

எம். கனகசபை
கூட்டுறவு அ. உ. ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

---

## ஏமாறாதே; ஏமாற்றாதே!5

பொதுமுகாமையாளர் கையிருப்பைப் பார்த்த போது, நல்லதம்பியரின் கூற்று சரியாகத்தான் இருந்தது.

கூடுதல்கையிருப்பிற்குவிளக்கம் கோரி வசந்தகுமாருக்குக் கடிதம் அனுப்பப்பட்டது, வசந்தகுமார் எதிர்பார்த்த தொன்றுதான்.

பொது முகாமையாளரின் கடிதத்தில் '' தங்கள் பொறுப்பில் இருந்த கிளையில் கையிருப்பு என்னால் பரிசோதிக்கப் பட்டபோது கூடுதலாக 500/- ரூபா இருந்தது என்னால் கண்டுபிடிக்கப்பட்டது. இதற்காக ஏன் உம மீதுநடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான விளக்கத்தை தரவும் ''

வசந்தகுமார் கடிதத்தைத் திரும்பத் திரும்ப படித்தான். செய்யாத பிழைக்கு விளக்கம் கேட்டு கடிதம்வந்திருக்கு ... .. நல்லதம்பியரின் காசில் தான் மிகுதியை வைத்திருந்தேன் ... ... நடந்த சம்பவங்களை விளக்கமாக வசந்தகுமார் எழுதினான்.

வசந்தகுமாரின் பதில் பொதுமுகாமையாளருக்குத் திருப்தி அளிக்கவில்லை.

தாங்கள் அனுப்பிய பதில் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இல்லை. உம்முடைய கிளையைப் பாரம் கொடுத்துவிட்டு தலைமைக் காரியாலயத்திற்கு சமூகம் தரவும்; என்று பொது முகாமையாளரிடம் இருந்து அடுத்த கடிதம் வசந்தகுமாருக்குக் கிடைத்தது.

இக்கடிதத்தைப் பார்த்ததும் அண்மையில் நடந்த சம்பவங்கள் வசந்தகுமாருக்கு சங்கடத்தை ஏற்படுத்தியது. 10 வருடங்களாக வேலை செய்தும் ஒரு தண்டனையும் பெறாதவனுக்கு, தலைமைக் காரியாலயத்தில் போய் இருப்பதென்பது தான் கஷ்டமான காரியம். கூட்டுறவுச் சேவையில் முற்றுமுழுதாகத் தன்னை இணைத்துக் கொண்டவன், எங்கு சென்றாலும் சங்கக் கதைதான், தரம (1) கிளை முகாமையாளரான அவனுக்கு என்னவோபோல் இருந்தது. எதற்கும் பொதுமுகாமையாளரை வீட்டில் சந்திக்க முடிவு செய்தான்.

என்ன மனேச்சர் இந்த நேரம் வந்திருக்கிறியள் ?

இல்லை சேர், பொதுமுகாயாளர் என்ற நிலையில உங்களிடம் வரவில்லை. நீண்ட காலமாக சங்கத்தில் வேலை செய்தவன் என்ற நிலையல் என்னை உங்களுக்குத் தெரிந்திருக்கும். அதுதான் நடந்ததை சொல்லுவம் என்று...

மனேச்சர் நீங்கள் செய்தது பிழைதானே ?

இல்லை சேர். நான் சங்க நிதியை மோசடிசெய்யவில்லை விற்பனைக் காசில் ஒருவருக்கு 500 ரூபா தேவை என்றபடியால் கொடுத்தேன். அதனால் நல்லதம்பி அண்ணயிடம் காசு வாங்கிக் கட்டினேன். அவர் தந்த ஆயிரம் ரூபாவில் மிச்சம் 500/-ரூபாவை விற்பனைக் காசுடன் வைத்து விட்டேன். வேண்டுமென்றால் நல்லதம்பி அண்ணரிடம் கேட்டுப் பாருங்கள்.

மனேச்சர், இதைச் சொன்னவர் நல்லதம்பியர்தான். நல்லதம்பியருக்கு சாமான் கொடுக்காததுதான் இந்த நிலமைக்குக் காரணமென்று வசந்தகுமாருக்குப் புரிந்தது.

நல்லதம்பியர் சுயநலத்திற்காக செய்த முறைபபாடு. 500/- ரூபாவை என் தேவைக்கா எடுத்தேன்? ஒருவருக்கு உதவிசெய்யப்போய்... வசந்தகுமார் மனம் நொந்தான்.

இன்று ஏமாறுபவன் இருந்தால் ஏமாற்றுபவனும் இருக்கச் செய்வான். நல்லதம்பியர் போன்றவர்களை இனம் காணப்படும் வரை வசந்தகுமார் போன்றவர்கள் ஏமாறத்தான் வேண்டும். ஒருவருக்கு வழியைச் சொல்லலாம் வழித்துணையாகச் செல்ல முடியாது.

முற்றும்.

— நாரையூரன்

---

## பதவி உயர்வு

வடபிராந்திய மக்கள் வங்கி அலுவலகம், மற்றும் மககள் வங்கிக் கிளைகளில் பணிபுரிந்த 21பேர்கள்பதவி உயர்வு பெற்றுள்ளதாக அறிவிக்கப் பட்டுளளது.

பதவி உயர்வு பெற்றவர்களில் 16பேர்முன்னைய யாழ்ப்பாணம் கூட்டுறவுவங்கியில் கடமை புரிந்தவர்கள் என்பதுகுறிப்பிடத்தக்கது.

---

## அரச குழு பார்வையிட்டது

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சு வார்த்தைகளை நடாத்த வந்த சிறிலங்கா அரச பிரதிநிதிகள் யாழ் கோட்டைப் பகுதியில் இராணுவ நடவடிக்கைகளின போது சேதமடைந்த கூட்டுறவாளர் இலலமான யாழ். வீரசிங்கம் மண்டபத்தினையும் அதனோடிணைந்த மாடிக்கட்டிடங்களையும் பார்வையிட்டுச் சென்றனர்.

# வடக்கையும் கிழக்கையும் இணைத்த சேவையாளன்

''கூட்டுறவே நாட்டுயர்வு'' என்கிற கூட்டுறவுமந்திரத்தினை மக்கள் மத்தியில் பரப்பி; கூட்டுறவு அடிப்படையில் புதிய சமுதாயமொன்றைக் கட்டி எழுப்புவதற்கு தம் வாழ்நாளில் பெரும்பகுதியைச் செலவிட்ட அமரர்கள் பொ. செல்வரத்தினம், சு. கந்தையா ஆகியோரை நினைவு கூர்ந்து இக்கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டுள்ளது.



'கூடிவாழ்ந்தால் கோடி நன்மை'' என்ற முதுமொழிக்கமைய கூட்டுறவு இயக்கத்தினூடாக மக்களுடன் கூடி வாழ்ந்து ''செயற்கரிய செய்வார் பெரியார்'' என்னும் வாக்கிற் கிணங்க வாழ்ந்து தமிழ் பகுதிகளின் கூட்டுறவு வளர்ச்சியில் தனக்கென தனியிடம் ஒன்றை ஏற்படுத்தியிருந்தார் அமரர் செல்வரட்ணம்.

1943ம் ஆண்டு கூட்டுறவுச் சேவையில் தன்னை இணைத்துக் கொண்ட அமரர் செல்வரத்தினம்கூட்டுறவுதிணைக்கள உத்தியோக ரீதியில் சுமார்20 வருடங்கள் வடக்கையும், கிழக்கையும் இணைக்கும் கூட்டுறவுப் பாலமாகத் திகழ்ந்தார்.

கூட்டுறவின் ஜனநாயகப் பண்புகளை, சாதாரண மக்களிடையே வேரூன்றச் செய்வதற்கு, கூட்டுறவுக் கல்வி தொடர்பான பயிற்சித் திட்டங்களை உருவாக்கி அதற்குரிய பிரசார உத்திகளைக் கையாண்டு கூட்டுறவுக் கொள்கைகளை மக்கள் மத்தியில் பரப்பினார்.

1963ல் அரச சேவை (கூட்டுறவு) யில் இருந்து இளைப்பாறிய அமரர், அப்போதிருந்த, கூட்டுறவாளரின் அதியுயர் உன்னத சபையாக விருந்த ''வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையின்'' பிரதம லிகிதராகப் பதவி ஏற்று அதன்பின், அச்சபையின் நிர்வாகச் செயலாளராகவும் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளராகவும் கடமையாற்றினார். கூட்டுறவு இயக்கம் புனரமைக்கப்பட்ட பின்பு தேசிய கூட்டுறவுச் சபையின் யாழ், மாவட்ட செயலாளராகவும் தொடர்ந்து சேவை ஆற்றினார்.

வடமாகாண கூட்டுறவாளர்களின் உழைப்பின் சின்னமாக விளங்கிய வீரசிங்கம் மண்டபத்தையும், அதனுடன் இணைந்த மேல்மாடிக்கட்டிடத்தையும் உருவாக்குவதில் முன்னின்று உழைத்தார்.

- பெ. கனகசபாபதி -

கூட்டுறவில் சிக்கனத்தின் சின்னமாக மிளிரும் ஐக்கிய நாணய சங்கங்களின் சமாசத்தின் தலைவராக இருந்து சாதாரண மக்களிடையே சிக்கனம், சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தி அதில் வெற்றி கண்டார்.

அமரர் செல்வரத்தினம் கூட்டுறவுத்துறையில் சேவையாற்றிய அதேசமயம், நாடகத்துறை, விளையாட்டுத்துறை, கல்வித்துறை, விவசாயத்துறை, போன்ற பல்வேறு சமூகசேவைத்துறைகளில் தன்னை ஈடுபடுத்தி அதற்குரிய துறைசார் அறிஞர்களுடன் இணைந்து பல அமைப்புக்களை உருவாக்கி செயற்பட்டதுடன் அத்துறைகளிலும், கூட்டுறவு அம்சங்களான சமுதாயநீதி. ஜனநாயகப் பண்புகள். பரஸ்பர உதவி ஆகியவற்றைப் புகுத்தி அதில் வெற்றி கண்டார்

இத்தகைய பண்புகள், சேவைகள் மிக்க பெரியார் அமரர் செல்வரத்தினத்தை கூட்டுறவாளர்களும் மற்றையோர்களும் நினைவு கூர்வதில் பெருமையடைவோமாக.

## கூட்டுறவுத்துறைமூலம்

# ஏழை மக்கள் வாழ்க்கையின் மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்!

மனிதகுலம் காணாதமேம்பட்ட சமுதாயமொன்றை கூட்டுறவு இலட்சியங்களின் அடிப்படையில் உருவாக்குவதையே குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்துகாட்டியவர் அமரர் கந்தையா.

மாதகல் கந்தையா ஆசிரியர் என்றால் அது கூட்டுறவாளர் கந்தையா அவர்களையே குறிக்கும். நாட்டுப்பற்றாளனாக வாழ்ந்து ஆசிரியத் தொழிலுடன் கூட்டுறவிலும் தன்னை இணைத்து கூட்டுறவுக் கொள்கைகளையும், இலட்சியங்களையும், பாமர மக்கள் மத்தியில் நிலைபெறச் செய்தவர் அமரர் கந்தையா.

சாதாரணமாக, கிராமப்புற மக்கள் மத்தியில் சிக்கனத்தையும், சேமிப்பையும் அறிமுகப்படுத்தி, அதன் மூலம் அவர்கள் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துமுகமாக மாதகல் வடமேற்கு ஐக்கியநாணய சங்கத்தை 1932 ல் ஆரம்பித்து அதன் தலைவராக இருந்து செயற்பட்டார்.

அமரர் அவர்கள் புனித யோசவ் மகாவித்தியாலத்தில் ஆசிரியராக கடமையாற்றிய காலத்தில் 1942-ல் மாதகல் மத்தி ஐக்கிய பண்டகசாலையை ஆரம்பித்தார்.

1952-ல் பண்டதரிப்பு கோவில்பற்று விளைபொருள் உற்பத்தியாளர் கூட்டுறவு சமாசத்தை ஆரம்பித்து அதன் மூலம் விவசாயிகளின் விளைபொருட்களை நிதான விலைக்குக் கொள்வனவு செய்து அவற்றை விற்பனை செய்து அதில் கிடைத்த இலாபத்தை அவர்களுக்கே பங்கீடு செய்து கொடுத்த பெருமைக்குரியவர்.

- க. ஒ. பங்ராஸ் -

1957-ல் மாதகல் மத்தி பல நோக்குக்கூட்டுறவுச்சங்கத்தை நிறுவி அதில் அங்கத்தவர்கள் பலரைச் சேர்த்து கூட்டுறவின் பலனை சகலரும் அடையச் செய்தார்.

வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையின் செயலாளராகவும், சிறிலங்கா தேசிய கூட்டுறவு சபையின் யாழ் கிளைத் தலைவராகவும், வடமாகாண கூட்டுறவு வங்கியின் இயக்குனராகவும், வடபகுதி விவசாய உற்பத்தியாளர் சமாசத்தின் இயக்குனராகவும், பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கத் தலைவராகவும், யாழ் கூட்டுறவுக் கல்லூரியின் பகுதி நேர



விரிவுரையாளராகவும், மூளாய் கூட்டுறவு வைத்திய சாலை இயக்குனராகவும், தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலை தலைவராகவும், சிறிலங்கா தேசிய கூட்டுறவு சபையின் உபதலைவராகவும் பணியாற்றி தன்னலமற்ற கூட்டுறவு சேவைமூலம் கூட்டுறவாளர்களின் பாராட்டுதல்களைப் பெற்றார்.

இன்று அவர் ஸ்தாபித்த கூட்டுறவு நிறுவனங்கள், அவற்றின் மூலம் ஏழைமக்களுக்கு செய்த சேவைகள், கூட்டுறவின் பால் அவர்களை ஒன்று சேர்த்து அவர்கள் வாழ்க்கையின் மறுமலர்ச்சி நிறுவனங்களாக மிளிர்வதைக் காணும் போது அமரர் கந்தையா எல்லோர் நெஞ்சங்களிலும் நிறைந்துநிற்கிறார்.

## தாய்மையுற்ற பெண்கள்

# "மலேரியா" மாத்திரைகளைப் பயன்படுத்த வைத்திய அறிவுரை அவசியம் !

மாரிகாலம் வர நுளம்பு வரும். நுளம்பு வர மலேரியாநோய் வரும். இந்நோய் குழந்தைகள், கர்ப்பவதிகளுக்கு எமனைப்போன்றது உங்கள் பாதுகாப்புக்கென சில ஆலோசனைகளை சுகாதாரக் கல்வி அதிகாரி திரு. கா. வைத்தீஸ்வரன் இக் கட்டுரையில் வழங்கியுள்ளார்.

எமது பிரதேசத்தில் பொது மக்களைப் பாதிக்கும் நோய்களில் மலேரியாக்காய்ச்சல் ஓர் முன்னணிப் பிரச்சனையாகும் மலேரியாவைக் குணமாக்கமுடியும் என்ற நிலைமை இருந்த போதும், இந்நோய் குணமடைய நீண்ட நாட்கள் எடுப்பதனால் நோயாளியின் அதிக சக்தி விரயமாவதையும் மீண்டும் முன்னைய நிலையை அடைய அதிகநாட்கள் செல்வதையும் அவதானிக்க முடிகின்றது. அத்துடன் பல குழந்தைகள் இறக்கும் நிலமையும் ஏற்படுகின்றது. இந்நோய் நிலமை காரணமாக பல்லாயிரக்கணக்கானோர் போஷாக்கின்மைக்கு இலக்காகின்றனர்.

பரவும் விதம் :

மலேரியா நோயாளியின் இரத்தத்தில் உள்ளஓர்ஒட்டுண்ணியால் இந்நோய் ஏற்படுகிறது. இவ்வொட்டுண்ணி அனோபிலிஸ் குயிலிபேசிஸ் நுளம்பு மூலம் மற்றவர்களின் உடலினுள் செலுத்தப்படுகின்றது. இந்நுளம்பு மலேரியா நோயாளியைக் கடிக்கும் போது அவரது இரத்தத்தையும், ஒட்டுண்ணியையும் தன் உடலுள் இழுத்துக் கொள்கின்றது. இந்நுளம்பு பின்னர் ஓர் சுகதேகியைக் கடிக்கும் போது இவ்வொட்டுண்ணிகளை அவரது உடம்பினுள் செலுத்துகிறது. அவ்வித நுளம்பால் கடிக்கப்பட்டவருக்கு 10 – 14 நாட்களுக்குப் பின்னர் மலேரியாக்காச்சலுக்குரிய குணம் குறிகள் தோன்றும்.

குணம் குறிகள் :

முறைக்காய்ச்சல் விட்டு விட்டுக் காய்தலும், நடுக்கமும் மலேரியாவுக்கான குணம் குறிகளாகும். தலையிடி, ஓங்காளம் முதலியனவும் ஏற்படலாம். இக்காய்ச்சல் சிலமணித்தியாலங்கள் நீடித்த பின்னர் கடும்வியர்வையுடன் மறைந்து மீண்டும் ஓரிருநாட்களுள் தோன்றும். இதன் மூலம் நோயாளியின் உடல் நலம் பாதிப்படைகின்றது, கீழே தரப்படும் காரணிகளை அநுசரிப்பதன்மூலம் மக்களுக்கு ஏற்படும் மரணங்களைத் தடுப்பதுமல்லாமல், பலஆயிரக் கணக்கானோர் போஷாக்கின்மையால் பாதிப்படைவதையும் தடுக்கலாம்.

**கா. வைத்தீஸ்வரன்**

மக்கள் நுளம்புக்கடியில் இருந்து பாதுகாக்கப்படல் வேண்டும். (குறிப்பாக இரவு நேரங்களில்)

நுளம்புவலைகளைப் பாவிக்க முடியும் ( நுளம்பை விரட்டக் கூடிய ரசாயன மருந்து பூசப் பட்டவைகள் தற்போது உண்டு. )

நுளம்புத்திரி (சுருள்) பாவித்தல்.

நுளம்பு வீட்டினுள்ளே நுளையாதவாறு யன்னல் கதவுகளுக்கு வலைகள் பொருத்துதல்.

வீட்டினுள்ளே உள்ள நுளம்புகளை மருந்து தெளித்து அழித்தல்.

நீர்த் தேக்கங்களில் குடம்பிகளை அழிக்கக்கூடிய மீன் வகைகளை வளர்த்தல்.

நுளப்பு பெருகாது தடுத்தலும். நுளம்புக்குடம்பிகளை அழிப்பதிலும் ஊரிலுள்ள அனைவரும் ஒத்துழைத்தல்

நீர் தேங்கிநிற்கும் எவ்விடங்களிலும் நுளப்பு பெருக்கமடையும். குளிகள், நீர்த்தேக்கங்கள், சதுப்புநிலங்கள்.

நீரோடைகள், வாய்க்கால்கள், தகரம், சிரட்டை, ரயர் முதலியன. சில சமயங்களில் மாடுகள் மிதித்த அடிச்சுவட்டில் கூடச் சீவிக்க முடியும்.

பள்ளம். குழிகளாயின் அவற்றைநிரப்புதல், நீர்ஓடக்கூடியதாக வாய்க்கால்கள் அமைத்தல், சிரட்டை, ரயர், தகரம் போன்றவற்றில் நீர் தேங்காது தவிர்த்தல்; நீர்த் தேக்கங்களுக்கு எண்ணெய் விசுறுதல் முதலியனவற்றின் மூலம் நுளம்புக் குடம்பிப் பெருக்கத்தைத் தடுக்கலாம்.

மலேரியா முக்கிய பிரச்சினையாக இருக்கும் பிரதேசத்தில் கர்ப்பவதிகள், கற்பகாலம் தடுப்புச் சிகிச்சை பெறல் வேண்டும்.

கர்ப்பிணிப் பெண்கள் இந்நோய்க்கு இருமடங்குக்கு மேலாகப் பாதிப்படையக் கூடியவர்களாவர். கர்ப்பகாலத்தில் இந்நோய் மிகவும் ஆபத்தானது. கூடிய இரத்தச்சோகையை ஏற்படுத்துவதனால் அவர்கள் மத்தியில் கருச்சிதைவு, குறைமாதபிரசவம், பேற்றுக்கு முன்னதாகவே குழந்தை பிறத்தல் முதலியன சம்பவிக்கமுடியும். இவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் எடைகுறைவாகவும், பெலவீனமுற்றவர்களாகவும், எளிதில் நோய்த்தொற்றுக்கு ஆளாகக் கூடியவர்களாகவும் இருப்பர்.

கர்ப்பகாலம் பூராகவும் தொடர்ந்து மாத்திரைகள் எடுப்பதன்மூலம்இந்நோயைத் தடுக்கலாம்.

(5ம் பக்கம் பார்க்க)

தொடர் நவீனம்

# தடுமாறும் நெஞ்சங்கள் ...

கே. எஸ். ஆனந்தன்

விடிந்தும் விடியாத காலை நேரம். மணி ஐந்து. திருப்பள்ளிஎழுச்சி பாடி கதிரவனைத்துயில் எழுப்ப முயற்சிக்கும்புள்ளினங்கள், ஆங்காங்கே ஆலயங்களில் ஒலிக்கும் கண்டாமணியின் வெண்கல நாதம். வீதிகளில் போக்குவரத்துக்கள் ஆரம்பித்துவிட்டதன் அறிகுறியாக ஒலிக்கும் சைக்கிள் மணிகள் - மண்ணெண்ணையில் ஓடும் இயந்திர வண்டிகளின் உறுமல்கள். பனிமூட்டத்தினை ஊடறுத்து ஒலிக்கும் மனிதக் குரல்கள். பெருமாள் கோயில் ஒலிபெருக்கியிலிருந்து அயன மண்டலத்தில் கலந்து ஒலிக்கும் சுப்ரவாதத்தின் இனிமை விடியலுக்கு சுருதிசேர்த்துக்கொண்டிருந்தது. இவை எதுவும் அவனைப் பாதித்ததாகத் தெரியவில்லை. அன்று லீவு நாளாகையினால் வழமையாக ஐந்து மணிக்கே எழுந்துவிடும் அவன் அன்று விழித்த பின்பும் படுக்கையை விட்டெழ மனமின்றி படுத்திருந்தான்.

சுவரில் மணிக்கூடு தன் கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தது. மணி ஐந்தரையை அறிவிக்கும் அலராம் ஒலித்த வேளையில் வானத்தின் குண்டு வீச்சு விமானத்தில் இரைச்சல். அதைத் தொடர்ந்து எங்கோ இடியோசையாய் உள்ளத்தை உலுக்கும் குண்டுச் சப்தம். கட்டிலை விட்டெழுந்தவன் ஜன்னலண்டை சென்று கதவுகளைத் திறந்துவிட்டு வானத்தை வெறித்துப் பார்த்தான். விமானங்களின் இரைச்சல் கேட்டதே அன்றி விமானங்களைத் தெரியவில்லை. கண்மூடித்தனமாக அதிகாலையில் குண்டுவீசும் விமானப் படையினரை மனதிற்குள் சபித்தவாறே தன் அன்றாடக் கருமங்களை கவனிக்க ஆரம்பித்தானாயினும் அவன் மனதை ஆக்கிரமித்துக்கொண்டிருந்த பிரச்சனையே விசுவரூபமாய் அவன் மனதில் சுழன்றுகொண்டிருந்தது.

இளம் வயதில் வறுமையின் கோரப்பிடியில் சிக்கிய குடும்பத்தில் கடைசிப்பிள்ளையாய் பிறந்தவன். மூன்று அக்காக்களுக்கு செல்லத்தம்பி. அவனுடைய பள்ளிப்பருவத்தில் தந்தை மாரடைப்பால்இறந்து போக கல்யாணமாகாத இரு சகோதரிகளையும் அவனையும் தாய்தான் வளர்த்தாள். பொருட் செல்வம் அவர்களை ஆள மறுத்தபோதும் கல்விச் செல்வத்தின் பூரண ஆசியால் புலமைப்பரிசில்மூலம் படித்து உயர்நிலையடைய செல்வலட்சுமியும் அரவணைக்க ஆரம்பித்தாள். சகோதரிகள் இருவரும் நல்ல இடத்தில் திருமணம் செய்துகொண்டனர். ஆனாலும் அவனுடன் வேறு ரூபத்தில்விதிவிளையாட ஆரம்பித்தது.

இளம்வயதில் உயர்பதவிக்கு வந்துவிட்டபோதும் தாயை இழந்து சுகவாழ்வை இழந்து தனிமரமாக வாழ்ந்துகொண்டிருந்தான். அவனுடையபதவி மக்களுக்கு மனப்பூர்வமான சேவைசெய்ய வழிவகுத்தது. தன்னுடைய சுயதுன்பங்களை மறந்து மக்கள் சேவையில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுதிருப்தியடைந்தான்.

பூசை அறையில் வழிபாட்டை முடித்துக்கொண்டு வந்தவன் நடு ஹோலில் மாட்டப்பட்டிருந்த தாயின் படத்துக்கு சில ரோசா மலர்களை வைத்துவிட்டு கண்மூடித்தியானித்தான். பின்பு தாயின் பிம்பத்தை உற்றுநோக்கியவாறே ''அம்மா! நான் யாருக்கும் எந்த திங்கும் மனமறிந்து செய்தேனில்லை. நீ வளர்த்த பிள்ளை என்றும் மன உறுதியோடும் மன அமைதியோடும், வாழ அருள்செய்வாய்'' என்று வாய்விட்டே கேட்டுக்கொண்டான்.

புன்னகை மலர்ந்த அன்னையின் வதனத்தில் ஓர் பிரகாசம். 'கலங்காதே மகனே' என்று தலையை தன் கரங்களால் கோதி ஆறுதல் தருவது போன்ற ஓர் பரவச உணர்வு அவனை ஆட்கொள்ள மனதில் ஓர் நிறைவு-உறுதி - உற்சாகம். தாயின் பாதங்களைத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டு அலுவலக மேசையில் வந்து உட்கார்ந்ததும் ஆவிபறக்கும் தேநீருடன் அறைக்குள்நுழைந்தான் சமையற்கார மாணிக்கம்.

'குட்மோணிங் தம்பி'

'குட்மோணிங் மாணிக்கம், இன்று கொஞ்சம் லேட்டாயிடுச்சு' என்று சிரித்துக் கொண்டே கூறினான்.

நெற்றி நிறைந்த விபூதியும் சந்தனப்பொட்டும், புன்னகை தவழும் முகமுமாய்மாணிக்கம் அந்தவீட்டு எசமானைப்போல வலம் வருவான். சமையலிருந்து வீட்டு நிர்வாகமே அவனிடம்தான். தன்மான உணர்வுகளை மாணிக்கத்திடம் தான்ஒழிவு மறைவின்றி கூறுவான் ரவிசங்கர். தாயின் இடத்தில் மாணிக்கமே அவனுடைய சகல அலுவல்களையும் கவனிப்பான்.

'' தம்பி இன்று யாரோ ஒரு விருந்தினர் வருவதாய் கூறியிருந்தீங்க யார் என்று சொல்லவில்லையே'' என்றான். '' ஒரு பெண். அவளை இதுவரை நான் பார்த்ததில்லை. அவளைப்பற்றி பத்திரிகைகளில் படித்திருக்கின்றேன். ஆள் பிரச்சனைக்குரியவள். அவள் ஏன் என்னைப் பார்க்க வருகின்றாள் என்பது பற்றி குழம்பிக் கொண்டிருந்ததால் தான் ... ... '' என்று கூறிக் கொண்டே தேநீரைப் பருக முற்பட்டான்.

'' தம்பி! எந்தப் பிரச்சனையையும் தூசா தட்டிவிடும் உங்களுக்கு ஒரு பெண்ணைப் பற்றி ஏன் இத்தனை குழப்பம் '' என்று சிரித்தான் மாணிக்கம்.

'' மாணிக்கம்! என்னை நன்றாக உணர்ந்து, புரிந்து கொண்ட ஒரே நபர் நீங்கள். தாய்க்குத் தாயாகவும், தந்தைக்குத் தந்தையாகவும் எனக்கு அறிவுரை கூறி என் துன்ப துயரங்களில் பங்கு கொள்கின்றீர்கள். உங்களுக்கே தெரியும் இந்த குண்டு வீச்சு விமானங்களைக் கண்டு நான் பயந்தவனில்லை. இரவு பகல் என்றில்லாமல் வந்து விழும்'செல்'கள்கூட என் மன உறுதியைக் குலைத்ததில்லை. கடற்பரப்பிலிருந்து வீசப்படும் பீரங்கி வேட்டுக்களை கேட்டு நான் துணுக்குற்றதில்லை. என் தலை விதியை நிர்ணயிக்க இவன்கள்யார்? சாவுக்கு அஞ்சி ஓடி ஒழிக்க முடியுமா? ஆனால் நான் அனுபவித்த அனுபவங்களிலிருந்து பெண் என்றதும் கொஞ்சம் பயப்படத்தான் செய்கிறேன் '' என்று கூறிச் சிரித்தான். '' உங்களுடைய நல்ல உள்ளத்தைப் புரிந்து கொண்டதும் புலி கூட பூனையாய் விடும் தம்பி ''

'' நான் வெளியே போய் விட்டு விரைவில் திரும்பி விடுவேன் அதற்கிடையில் அந்தப் பெண் வந்தால்கொஞ்சநேரம் உட்காரவை. அதற்கிடையில் வந்துவிடுவேன் '' என்று கூறி அவசரமாகப் புறப்பட்டான்.

சரியாக மணி ஒன்பதுக்கு அலராம் அடித்த போது வெளியே 'சார்ளி' யில் வந்திறங்கிய பெண்ணை '' வாங்க அம்மா, உள்ளே வந்து உட்காருங்க '' என்று வரவேற்றான் மாணிக்கம்.

'' வணக்கம். நீங்கள்...... ''

'' நான் இந்த வீட்டில் சமையற்காரன். தம்பி வெளியே போயிருக்கிறார் இப்ப வந்திடுவார் '' என்றான்.

மாணிக்கத்தின் தோற்றம், உடை, பேச்சுக்களை கவனித்த அந்தப் பெண்ணால் அவன் சமையற் காரனாயிருப்பான் என்று நம்ப முடியவில்லை. ரவிசங்கரை தம்பிஎன்று கூறும் உரிமை சமையற்காரனுக்கு எப்படிவரும். சிந்தித்தவாறே உள்ளே வந்து உட்கார்ந்தவளை உற்றுப்பார்ப்பது போன்ற கோமதியம்மாவின் பெரிய படம் எதிரே உயிர்த் துடிப்புடன் காட்சியளித்தது. குத்துவிளக்கின் மங்களமான ஒளியும், ஊதுபத்தியின் சுகந்த மணமும் அவளை மேலும் சிந்திக்கவைக்கவே '' இது ... இது ... '' என்று மாணிக்கத்திடம் கேட்டாள்.

'' இந்த வீட்டின் தெய்வம். தம்பியின் அம்மா கோமதியம்மா '' என்றாள்.

'' உங்க பெயர் ''

'' மாணிக்கம் ''

'' ஐயா தனியத்தான் போனாரா? அம்மாவும் கூட ... ... ... ''

''தம்பி தனியாளாகத்தானிருக்கின்றார். தனியே தான் போனார். ''

'மிஸ்டர் ரவி இன்னும், திருமணம் செய்யவில்லையா?

''இல்லை''

'' இந்தவீட்டில் வேறு யார்? யார்? இருக்கிறார்கள் ''

'' நானும் தம்பியும் தான் ''

அவள் மனதில் அதுவரையில் கட்டியிருந்த எண்ணக் கோட்டைகள் தகர்ந்து மனதில் வெறும் கேள்விக்குறியே எஞ்சி நின்று உறுத்தியது.

வெளியே ஸ்கூட்டர் சத்தம் தொடர்ந்து சப்பாத்தின் மென்மையான ஒலி வாசலில் வந்ததும் தயங்கி நின்றபடியே 'மிஸ் சுதாமதி தங்களைக் காக்கவைத்து விட்டேன் போலும் மன்னிக்கவேண்டும்'' என்றுகரம்கூப்பிநின்றவனைப் பார்த்து எழுந்து கைகூப்பினாள் சுதாமதி.

'' இப்ப தான் நானும் வந்தேன் ..... '' என்றுபேச முடியாது திணறினாள்.

'' உட்காருங்கள் இது என் தாயார். என்னை இந்நிலையில் வைக்க தன்னையே மெழுகுவர்த்தியாக்கிகொண்ட தெய்வம் '' என்றான்.

'' இப்படி ஒருமகனைப்பெற கொடுத்து வைத்தவங்க '' என்று சிரித்தாள்.

'' தாங்ஸ் '' என்று கூறியவன் அவளை நேருக்கு நேர் உற்று நோக்கினான்.

சிலரது உடையலங்காரம் சிலருக்கு அழகாகவும்,சிலருக்கு பொருந்தாத அவலட்சணமாகவும் இருக்கும். அவளுடைய உயரம், அதற்கேற்ற உடலமைப்பு பஞ்சாபி உடையில் இடுப்பளவுக்கு தொங்கும் கருநாகப்பின்னல்யாவும் அவளுடைய இயற்கையழகின் செழிப்பை பறைசாற்றின.

'' சார் நான் என்னை முதலில் அறிமுகம் செய்து கொள்ள விரும்புகின்றேன் '' என்றாள் '' மிஸ் சுதாமதி சுந்தரேசன் மகளிர் அமைப்பின் செயலாளர் சுதா-சுந்தரேசன் என்ற பெயரில் பெண்ணினத்தின் மேன்மைக்காக கட்டுரைகள் எழுதுபவர் '' என்று சிரித்தான் ரவிசங்கர்.

'' ஏற்கனவே என்னைப்பற்றி அறிந்துவைத்திருக்கின்றீர்கள் நான் அவ்வளவுக்கு பெருமைப் படக்கூடியதாக எதுவும் செய்யவும் இல்லை. ஆனால்தங்களை நான் சந்திக்க விரும்பிய விடயம் தங்களுக்கு பிடித்தமில்லாதாகவும் இருக்கலாம். அதற்காக முன்னமே உங்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன் ''

'' என்னைப்பொறுத்தமட்டில் விருப்பு வெறுப்புக்கு அப்பாற்பட்ட ஒருமன நிலையில் இப்போது வாழ்கிறேன். எதுவாயிருந்தாலும் தயங்காமல் கூறுங்கள் ''

'' என் தகப்பனார் சுந்தரேசனை உங்களுக்கு ஏற்கனவே தெரியும் என நினைக்கின்றேன் ''

'' எத்தனையோ சுந்தரேசன்கள் இருக்கின்றார்கள் அவர்களில் உங்கள் ... ''

'' மதுராவின் அப்பா சுந்தரேசன்தான் எனக்கும்தந்தை''

'' மிஸ் சுதாமதி - மதுரா... மதுரா உங்கள் ... ... ?

'' என் தங்கை ''

'' சுந்தரேசனுடைய ஒரே மகள் தானே மதுரா '' ?

''வெளி உலகுக்கு ஒரே மகள், நானும் அவர்மகள் தான். நான் உங்களைச் சந்திக்க விரும்பியது என் தங்கையை ஏன் ஏமாற்றினீர்கள்? என்று சண்டைபோட வந்தேன். ஆனால் ... .. இவ்விடத்தில் நிலமை என்னை பேசா மடந்தையாக்கி விட்டது'' தலை குனிந்துகொண்டாள்.

''மதுரா அதாவது உங்கள் தங்கை இப்போ ... ... ''

''கட்டிய கணவனையும் கைவிட்டு மனம் போனபடி அலைகிறாள். கேட்டால் உங்களைத்தான் திட்டித் தீர்க்கிறாள். நீங்கள் தன்னை ஏமாற்றிவிட்டதாக குமுறுகிறாள்''

'' தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்பவர் எப்போதும் பிறர்மீது தான் பழி போடுவார்கள். மதுராவும் அப்படித்தான். அவள் போக்கினை யாரும் புரிந்து கொள்ள முடியாது '' என்றபோது அவன் விழிகளை நீர் திரையிட்டது. அந்த நீர்த்திரையில் மதுரா தோன்றினாள்.

(வளரும்)

## இதயங்களில் நிறைந்தவர் !

''கந்தையா அப்பு'' என்று சகபணியாளர்களால் அன்பாக அழைக்கப்பட்டுவந்த திரு. சி. கந்தையா கூட்டுறவில் மானிப்பாய் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் இணைந்து 21 ஆண்டுகள் பல்வேறு பதவிகளை வகித்து தனது அப்பழுக்கற்ற சேவைமூலம் எல்லோர் இதயங்களிலும் தனக்கென ஒரு இடத்தைப்பிடித்துக்கொண்டார்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவற்றிலிருந்து வழுவாது, தனது சகபணியாளர்களுடன்அன்பாகப்பழகிதனக்கே உரித்தான நகைச்சுவையினால் எல்லோரையும் தன்பால் கவர்ந்து எல்லோரதும் அன்புக்கும், பாராட்டுக்கும் இலக்கானவர்.

கடமையையும், உரிமையையும் எப்படி பேணவேண்டும் என்பதற்கு உதாரணமாக வாழ்ந்துகாட்டிய சி. கந்தையா அமரராகி ஓராண்டு சென்றாலும், அவரின் செயற்பாடுகள் ஒவ்வொன்றும் எம் இதயங்களில் நிறைந்து நிற்கின்றது. கூட்டுறவில் முதிர்ந்த கனியொன்றை நாம் இழந்தநிலையில் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்.

அ. கலைச்செல்வி
மானிப்பாய் ப. தெ. வ. அ. கூ. சங்கம்.

## மௌனத்தின் சிறப்பு !

மூன்று ரிஷிகள் சுவர்க்கம் நோக்கிப் போய்க்கொண்டிருந்தார்கள். வழியில் பெரிய பருந்து ஒன்று பாம்பொன்றைத் தூக்கிக் கொண்டு போவதைப் பார்த்தனர்.

அப்போது ஒரு ரிஷி '' இது என்ன துக்கம்! இந்தப் பச்சைப் பாம்பு மிகவும் அநியாயமாக இக் கொடிய பருந்தின் வாயில் அகப்பட்டுக் கொண்டு வேதனைப்படுகிறதே! '' என்று பலவாறு கூறிப் பரிதவித்தார். உடனே அவருக்கு நடந்தது தெரியுமா? உடனே அந்த ரிஷி பூமியை நோக்கிக் கீழே விழுந்தார்.

அதைக் கண்ட மற்றொரு ரிஷி '' இக்கொடியபாம்புக்கு இதுவே தண்டனை. இதுவே தகுந்தது '' என்று சொன்னவுடன் அவரும் கீழே விழுந்து விட்டார்.

மூன்றாவது ரிஷியோ, '' இந்தப் பிரபஞ்சத்தில் உள்ள விசித்திரத்தின் நியாய, அநியாயங்களை நாம் எடுத்துக் கூற நமக்கு என்ன உரிமை அல்லதுவல்லமை இருக்கிறது? உண்டு என்றுசொல்வதற்கும், இல்லை என்று சொல்வதற்கும் நமக்கு என்ன அதிகாரம் இருக்கிறது அவனன்றி ஓரணுவும் அசையாது. ஆகையால் இப்பிரபஞ்சத்தில் நடப்பவைகளைக்கண்டு மனம்கோணாது; உலகத்தில் செய்வன செய்து மிகவும் பொறுமையுடன் இருப்பதே நமது கடமை '' என்று தனக்குள் சொல்லிக்கொண்டு வாயைத் திறக்காமல் மனதைச் சமாதானப்படுத்திக் கொண்டு மௌனமாக இருந்தார்.

அம்மகரிஷியாதொரு கஷ்டமும் இன்றி சுவர்க்கம் போய் சேர்ந்தார்.

ஹிதோபதேசம்
தொகுப்பு : வசீகரன்

## பல. நோ. கூ. சங்கங்களுக்கான

# மாதிரி உபவிதித் திருத்தம்

உபவிதி (6) ஈ. சங்க உபவிதிக்கு அமைய கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கு விரும்பி சங்கத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டதன்பேரில் இணை அங்கத்தவர்களாக சங்கத்தால் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள்.

உபவிதி (11) (1). உபவிதி 10 (2)ல் விதிக்கப்பட்டதற்கேற்ப பதிவுக் கோவையில் வைக்கப்படுவதற்காக விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கத் தவறிய ஓர் உறுப்பினர் அல்லது உபவிதி 9 இன்படி உறுப்பினராக அனுமதிக்கப்படுவதற்காக சம்பந்தப்பட்ட கிளைக்குழுவினால் உபவிதி 9 (3) இன்படி கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படாத ஓர் உறுப்பினர் கிளை உறுப்பினர்களின் எந்தக் கூட்டத்திற்கும் சமூகமளிக்கவோ அல்லது எவ்வித வாக்குரிமையைப் பயன்படுத்தவோ அல்லது கிளைக்குழுவிற்கு அல்லது சங்கத்தின் பொதுச்சபைக்கு அல்லது சங்கத்தின் நெறியாளர் குழுவிற்குத் தெரிவு செய்வதற்கோ உரிமையற்றவர் என்ற நிபந்தனைக்குட்பட எல்லா உறுப்பினர்களுக்கும் இந்த உபவிதியிலும் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பொருந்தும் நடைமுறையிலுள்ள கூட்டுறவுச் சட்டத்திலும் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகளும், கடமைகளும் பொறுப்புகளும் இருக்கும்.

உபவிதி (11) (2). எனினும் 06 - 03 - 92-ன் பின் அங்கத்தவராகச் சேர்ந்து ஒருவருடம் பூர்த்தியாகாதவரும், ஒரு முழுப் பங்கைச்செலுத்தி முடிக்காதவரும் ஆன ஒரு அங்கத்தவர் விடயத்தில் அவருக்குப் பொதுக்கூட்டமொன்றில் வாக்களிப்பதற்கும சங்கத்தின் பதவி ஒன்றுக்குத் தெரிவுசெய்யப்படுவதற்குமான உரிமை இருக்க மாட்டாது.

உபவிதி 18 (1). ஒரு பங்கின் பெறுமதி ரூபா 100/- ஆகும்.

உபவிதி 18 (4) ஒரு பங்கின் மொத்தப்பெறுமதி ஒரே தடவையில் செலுத்தப்படலாம் அல்லது ஆகக்குறைந்தது ரூபா 10/- தொடக்கக் கொடுப்பனவு ஒன்றுடன் கொடுப்பனவினை ஆரம்பித்து அத்தகைய தொடக்கக் கொடுப்பனவுத் திகதியிலிருந்து ஓராண்டுக்குள் முழுப்பங்கொன்றின் பெறுமதியினைச் செலுத்தி முடித்தலும் வேண்டும். கட்டுப்பணம் ஒன்றின் பெறுமதி விரும்பியவாறு அதிகரிக்கப்படலாம். 06-03-1992 க்கு முன்னர் முறைப்படி அங்கத்தவராகச் சேர்ந்துள்ள ஒருவர் தனது மிகுதிப் பங்கப்பணத்தைச் செலுத்தி பங்கொன்றின் பெறுமதியை ரூபா 100/- ஆக அதிகரிப்பதற்கு சங்கத்தின் பொதுக்கூட்டத்தில் பங்கொன்றின் பெறுமதி ரூபா 100/- என உபவிதித் திருத்தமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ........... திகதியிலிருந்து ஒருவருடகால அவகாசம் வழங்கப்படல் வேண்டும்.

உபவிதி 22 (1). உபவிதி 8 இன்படி நிறுவப்பட்ட ஓவ்வொரு கிளைக்கும் அக்கிளையின் வாக்காளர் பதிவேட்டில் பெயர் காணப்படும் உறுப்பினர்களால் உபவிதி 23-க்கு அமைவாக தெரிவு செய்யப்பட்ட ஒன்பது உறுப்பினர் கொண்ட ஒரு கிளைக்குழு ஒன்று இருத்தல் வேண்டும். ஆனால் இவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்களில் ஆகக்குறைந்தது இருவராவது 18 வயதிற்கும் 35 வயதிற்கும் உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். தற்போது பதவியிலுள்ள கிளைக்குழு ஒன்றில் வயது 18-க்கும் 35-க்கும் இடைப்பட்டவர்கள் இருவராவது இல்லாதவிடத்து தற்போதைய கிளைக்குழுக்களில் ஏற்படும் வெற்றிடங்கள் இத்தகையவர்களைக் கொண்டு நிரப்பப்படல் வேண்டும்.

இதன்கீழ் குறிப்பிடப்படும் எந்த ஓர் உறுப்பினரும் கிளைக்குழுவிற்கு தெரிவு செய்யப்படலாகாது.

உபவிதி 22 (1) (அ) 18 வயதுக்கு கீழ்ப்பட்டவர்கள்.

உபவிதி 22 (1) (ஔ) பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், மாநகரசபை உறுப்பினர்கள், நகரசபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்.

உபவிதி 22 (1) (:) 06 - 03 - 92-இன் பின் அங்கத்தவராகச் சேர்ந்து ரூபா 100 பங்குப் பணமாகச் செலுத்தி முடிக்காதவரும், அங்கத்தவராகச் சேர்ந்து ஒருவருடம் பூர்த்தியாகாதவருமான ஒருவர்.

உபவிதி 52 (1) சங்கத்தின் அலுவல்களை நிர்வகிப்பதற்கு ஒருநெறியாளர்குழு இருக்கும். இது வயது 18-க்கும் 35 க்கும் இடைப்பட்ட ஆகக்குறைந்தது இரு அங்கத்தவர்களையாவது உள்ளடக்கிய ஏழு உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்கும். இவர்கள் சங்கப் பொதுக்கூட்டத்தில் இரகசிய வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்யப்படுவார்கள்.

உபவிதி 52 (2) தற்போது பதவி வகித்துக் கொண்டிருக்கும் பணிப்பாளர் சபை வயது 18-க்கும் 35 க்கும் இடைப்பட்டவர்கள் இருவராவது இவ்விடத்து தற்போதைய பணிப்பாளர் சபையில ஏற்படக்கூடிய வெற்றிடங்கள் இத்தகையவர்களைக் கொண்டு நிரப்பப்படல் வேண்டும்.

உபவிதி 53 (1) (அ) 18 வயதுக்கு கீழ்ப்பட்டவர்கள்.

உபவிதி 53 (1) (ஏ) பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், மாநகரசபை உறுப்பினர்கள், நகரசபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள்.

உபவிதி 53 (1) (ஐ) 06 - 03 - 92-ன் பின் அங்கத்தவர்களாகச் சேர்ந்து ரூபா 100/- ஐ (புதிய பிரிவு) பங்குப் பணமாகச் செலுத்தி முடிக்காதவரும் அங்கத்தவராகச் சேர்ந்து ஒருவருடம் பூர்த்தியாகாதவருமான ஒருவர்.

(பதிவாளர் இவர்களின் நியமனத்திற்கு இது பெருந்தாது)

உபவிதி 53 (3) சங்கத் தலைவரும் ஏனைய நெறியாளர் குழு உறுப்பினர்களும் சம்பந்தப்பட்ட (புதிய பிரிவு) வருடத்தின் மார்ச் மாதம் 31 ஆம் திகதியிலிருந்தவாறான

(அ) தனதும் (ஆ) தனது வாழ்க்கைத் துணையினதும் (இ) தனது பிள்ளைகளினதும் சொத்துக்கள், பொறுப்புக்கள் தொடர்பான பிரகடனமொன்றை வருடாந்தம் இதற்கென உரிய படிவத்தின்மூலம் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அவர்களுக்குச் செய்தல் வேண்டும்.

இப்பிரகடனமானது இவர்களால் தாம் தெரிவு செய்யப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்கள் செல்வதற்குமுன் செய்யப்படுதல் வேண்டும். எனினும் ஏற்கனவே முன்னைய ஆண்டுக்கான பிரகடனம் ஒன்றைச் செய்துள்ள ஒருவரின் பதவி தொடர்ந்துவரும் ஆண்டின் ஆடி 1-ஆம் திகதிக்கு முன் முடிவுற இருக்குமிடத்து இவ்விறுதி ஆண்டுக்கான இப்பிரகடனத்தை இவர்செய்ய வேண்டியதில்லை.

உபவிதி 60 (6) பொதுச்சபையின் அனுமதியுடனும் சங்கம் அரச நிதியை பயன்படுத்தும் இடத்து பதிவாளர் அவர்களின் முன் அனுமதியுடனும், சங்கத்துக்குத் தேவைப்படும் நிலையான சொத்துக்களைக் கொள்வனவு செய்தல் மூலமோ அல்லது வேறு வழியிலோ சொந்தமாக்குவது.

உபவிதி 60 (7) பொதுச்சபையின் முன் அனுமதியுடனும், சங்கம் அரச நிதியைப் பயன்படுத்துமிடத்து பதிவாளர் அவர்களின் முன் அனுமதியுடனும் சங்கத்தின் எந்த நிலையான சொத்துக்களையும் விற்பனை செய்தல்.

## மாணவர் அரங்கு

### படித்ததை மறவாமல் இருக்க இதுவே வழி.

நினைவாற்றலை வளர்த்துக் கொள்ளுவது எப்படி என்பது தான்இன்றையமாணவர்களின் பாரிய பிரச்சனை. 'எவ்வளவுபடித்தாலும் நினைவில் நிற்க கஷ்டமாகிறது படிக்கும் போது ஞாபகமிருக்கிறது. நினைவுபடுத்திப் பார்க்கும் போது ஞாபகத்திற்கு வரமறுக்கிறது எல்லாப் பாடமும் நன்றாகத் தான் படித்தும் கேள்விகளும் படித்த பகுதிகளில் வந்திருந்த போதும் பதில்கள் ஞாபகத்திற்கு வரவில்லையே' என்று இன்றைய மாணவ சமூகத்தினர் பேசிக்கொள்வதுண்டு.

நினைவாற்றல் என்பது அறிவியல் பூர்வமான ஒரு கலை என்கிறார் ஒரு மேல் நாட்டு அறிஞர். எனவேதான் நினைவாற்றலை வளர்த்துக் கொள்வது என்பது விஞ்ஞானமுறைப்படி சாத்தியமானது என்று கூறுகிறார்கள்.

கவனமுடன் ஏழு(7) முறை படிக்கவேண்டும் ஒரு விஷயத்தைத் திரும்பத்திரும்பப் படிப்பதன்மூலம். அது நம்மனதில் ஆழப்பதிந்து விடும். இதைப் புராணங்கள் கூட உறுதிப்படுத்துகின்றன,

பள்ளிக்கூடங்களில் தமிழ் மற்றும் ஆங்கிலப்பாடங்களில் செய்யுள் பகுதிகளில் சிலவற்றை மனப்பாடப் பகுதி என்று குறிப்பிட்டிருப்பார்கள் மற்றப்பாடங்களில கேள்விகளுக்குப் பதில் சொல்லத் தெரியாதவர்கள் கூட இந்த மனப்பாடப்பகுதியை நன்றாய் மனப் பாடம் செய்து விடுவார்கள் எனவே ஒரு விஷயத்தைத் திரும்பத்திரும்ப படித்து மனதில் பதிய வைத்துக்கொள்ளவேண்டும்.

படிக்கும் விஷயங்கள் அளவில் பெரியனவாய் இருக்கும் போது, அவற்றை ஒரேயடியாகப்படித்து மனதில் நிறுத்துவது கடினமாய்த்தான் இருக்கும். அவற்றை பல சிறு சிறு பகுதிகளாய் பிரித்துக் கொண்டு அவைகளை தனித் தனியே படித்து மனப்பாடம் செய்து கொண்டு இறுதியில் ஒட்டுமொத்தமாய் ஞாபகத்தில் நிறுத்துவது சுலபமான வழியாகும்,

படித்த விஷயங்களை எழுதிப் பார்ப்பது இன்னொரு வழி. படித்தவை அனைத்தையும் முழுமையாய் எழுதிப் பார்த்து, நேரத்தைச் செலவழிக்காமல் படித்தவிஷயங்கள் ஒவ்வொன்றையும் சிறு குறிப்பாகவே எழுதிப் பார்த்தால் போதுமானது.

''கற்றலிற் கேட்டலே'' நன்று என்பது பழமொழி. படித்து ஞாபத்தில் வைக்கும் விஷயங்களை நாமே பேசி, டேப் ரெக்கோட்டரில் பதிவு செய்து கொள்ளலாம் பின்னர் பதிவு செய்த கெஸட்டை மீண்டும் மீண்டும் போட்டுக் கேட்டு விஷயங்களை மனதில் நன்றாய்ப் பதியவைத்துக் கொள்ளலாம். இது ஒரு விஞ்ஞான தொழில்நுட்பம்.

(6-ம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் கூட்டுறவு இயக்கம்; முக்கிய ஆண்டுகள்

1909ல் விவசாயிகளுக்கு கடன் வழங்கும், கடன் உதவும் சங்கங்கள் ஆரம்பிக்கவேண்டுமென சிபார்சு செய்யப்பட்டது.

1911ல் கடன் உதவு சங்கங்கள் பதிவு செய்வதற்காக கூட்டுறவுக் கட்டளைச் சட்டம் இயற்றப்பட்டது.

1912ல் ''வெல்ல படபத்து'' என்னும் கிராமத்தில் கடனுதவு சங்கம் முதன் முதல் பதிவுசெய்யப்பட்டது

1913ல் கூட்டுறவுச் சங்கங்களைப் மதிவு செய்வதற்காக விவசாய இலாகாப் பணிப்பாளர், பதிவாளராக நியமனம் பெற்றார்.

1916ல் உள்ளூர்க் கடனும் அபிவிருத்தி நிதியும் உருவாக்கல் பற்றிய 1916ம் ஆண்டின் 2:0 இலக்க கூட்டுறவு கட்டளைச் சட்டம் இயற்றப்பட்டது.

1921ல் கடன் உதவு சங்கங்கள் மட்டுமன்றி ஏனைய சங்கங்களையும் பதிவு செய்யும் வகையில் 1911ம் ஆண்டு சட்டம் திருத்தி அமைக்கப்பட்டது.

1924ல் கொழும்பில் முதன் முதலாக கூட்டுறவு மாகாண சமாசம் பதிவு செய்யப்பட்டது.

1926ல் கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளாராக W. K H. கெம்பல் நியமிக்கப்பட்டார்.

1927ல் முதலாவதுகூட்டுறவுப் பண்டகசாலைச்சங்கம் பசறைத் தோட்ட தொழிலாளரிடையே ஆரம்பிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது

1929ல் 1. யாழ்ப்பாணத்தில முதலாவது கூட்டுறவு மாகாண வங்கி அமைக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.
2. கூட்டுறவுச் சங்கங்களை பரிசோதனை செய்ய பரிசோதகர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

1930ல் விவசாய இலாகாவில் இருந்து கூட்டுறவு இலாகா பிரிக்கப்பட்டு தனியாக இயங்க ஆரம்பித்தது.

1934ல் யாழ்ப்பாணத்தில் யாழ்ப்பாணம், மலையாளம் புகையிலை விற்பனவுச் சங்கம் பதிவு செய்யப்பட்டது.

1935ல் திரு. W. K. H. கெம்பலுக்குப் பதிலாக திரு. H. கல்வேர்ட் பதிவாளராக நியமனம் பெற்றார்.

1936ல் 1. கூட்டுறவுச் சங்கங்களின் கட்டளைச் சட்டங்கள் ஒன்றிணைப்பதற்கான திருத்தம் செய்யப்பட்டது
2. மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்டு பதிவுசெய்யப்பட்டது.

1937ல் வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபை பதிவு செய்யப்பட்டது.

1938ல் கூட்டுறவுச்சங்கங்களின் பதிவாளராக J. D. சொய்சா என்னும் இலங்கையர் முதன் முதலாக நியமிக்கப்பட்டார்.

1942ல் 1. 2வது உலகயுத்தம் காரணமாக சகலருக்கும் உண்வுப் பொருட்கள் சென்றடையக் கூடியதாக அரசு கூட்டுறவுப்பண்டகசாலைகள் பலவற்றை அமைத்தது.
2. தென்னை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கப பதிவு செய்யப்பட்டது.
3. வடபகுதி விவசாய விளைபொருள் உற்பத்தி விற்பனையாளர் சமாசம் ஆரம்பிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

(வளரும்)

மலேரியா . .

இம் மாத்திரைகளை அரசினர் வைத்தியசாலைகளிலும் வெளிக்கள சுகாதார ஊழியர்களிடமும் பெற்றுக்கொள்ள முடியும். எல்லா மலேரியாத் தடுப்புவில்லைகளையும் கர்ப்பவதி எடுக்கக்கூடாது. எனவே வைத்திய ஆலோசனைப்படியே இம்மருந்தை பாவிக்க வேண்டும்.

தொடர்ந்து காச்சலினால் பாதிக்கப்பட்டோர் ஓர் வைத்தியசாலைக்கோ அல்லது ஓர் வெளிக்கள சுகாதார ஊழியரிடமோ காண்பிக்கவேண்டும்.

இரத்தப்பரிசோதனை செய்வதன்மூலம் எவ்வித மலேரியாவினால் பாதிக்கப்பட்டவர் என்பதை நிச்சயப்படுத்தலாம் ஐந்து நாட்களுக்குரிய பூரண சிகிச்சை அளிக்கப்படல் வேண்டும்.

காச்சல் விட்டாலும்.

ஐந்து நாட்களுக்குரிய சிகிச்சை தொடர்ந்து பாவிக்கப்படல் வேண்டும்,

மலேரியா பொதுவாகக் காணப்படும் பிரதேசங்களில் பாதிப்படையாக் குழந்தைகளுக்கு தடுப்புமருந்தாக வில்லைகள் கொடுக்கக்கூடாது. கொடுப்பதன் மூலம் இயற்கையாக உண்டாகும் எதிர்புச்சக்தியைப் பாதிப்படையச் செய்யமுடியும்.

காய்ச்சல் உள்ள குழந்தைகளை குளிர்மையான நிலையில் வைத்திருக்க வேண்டும். (ஆனால் குளிரான நிலையில் அல்ல) (Kept cool Not cold)

பின்வரும் நிலைமையில் குளிர்மையாக வைத்திருக்க முடியும்

காய்ச்சலைக் குறைக்கக்கூடிய பரசிற்றமோல் (paracetamol) போன்ற வில்லைகள் பாவித்தல்.

குளிர்ந்த நீரில் குழந்தைக்கு ஒத்தடம் (Sponging) கொடுத்தல் அல்லது கழுவலாம்.

அதிகமான உடைகளையோ, உடல்வெப்பத்தைக் கூட்டக்கூடிய ''பிளேங்கற்'' போன்ற தடித்த துணிகளையோ அணியாதிருத்தல்.

மலேரியாவினாற் பீடிக்கப்பட்டு குணமடைந்த ஒருவருக்குப்போதியளவு பானமும் உணவும் தேவை. மலேரியாக்காய்ச்சலின்போது சக்திவிரையமாவதனால் கூடியளவு நீர், வியர்வை மூலம் இழக்க நேரிடுகின்றது. நோயாளி எவ்வளவு கெதியாக உணவு, நீர் எடுக்கின்றாரோ அவ்வளவு கெதியில் இழந்தவைகள் மீளளிக்கப்படல் வேண்டும். போதியளவு உணவும், பானங்களும் கொடுப்பதன் மூலம் உடல் வளர்ச்சி பாதிப்பையும் போஷாக்கின்மையையும் தவிர்க்கலாம்.

# பல. நோ. கூ. சங்கங்களின் நிதிவளம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்!

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள 27 பல. நோ. கூ. சங்கங்களில் சில சங்கங்கள் தொழிற்படுமூலதனம், மற்றும் நிதி உறுதிப்பாடு கடந்த ஆறுமாதங்களில் மோசமான நிலையில் இருப்பதாக மாதாந்த செயற்பாட்டு அறிக்கைகளில் இருந்து தெரியவந்துள்ளது

இந்நிலை தொடர்ந்து நீடிக்குமானல் இச்சங்கங்கள் செயலிழக்க வேண்டிவரும் என்றும் இதனை நிவர்த்திசெய்வதற்கு சம்பந்தப்பட்ட சங்கங்களின் நெறியாளர்கள், பணியாளர்களுடன் இணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், அல்லாது விட்டால் எதிர்காலத்தில் இச்சங்கங்களை கட்டி எழுப்பமுடியாது என்றும் வடபிராந்திய கூட்டுறவுத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# கிராம மக்களிடையே சேமிப்பை வளர்த்தவர் அமரர் ஞானப்பிரகாசம்

"சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்கள்மூலம், கிராமிய மக்களது பொருளாதாரத்தை சேமிப்பின் மூலம் வளர்த்துஇலகுகடன்கள்மூலம் அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே அமரர் ஞானப்பிரகாசத்தின் கூட்டுறவு மந்திரமாகவும், சிந்தனையாகவும் இருந்தது."

நல்லைஆதீன மண்டபத்தில் இடம்பெற்ற அமரர் ஞானப்பிரகாசம் ஞாபகார்த்த கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய வட பிரந்திய கூ. அ. உதவி ஆணையாளர் திரு. க. பஞ்சலிங்கம்மேற்கண்டவாறு கூறினார்.

உலர்வலய அபிவிருத்தி மன்றத் தலைவி திருமதி ந. ஜெகதீஸன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு க. பஞ்சலிங்கம் தொடர்ந்து பேசுகையில்,

அமரர் ஞானப்பிரகாசத்தின் சிந்தனைகளை மந்திரமாகக்கொண்ட சங்கங்கள், கிராமிய மட்டத்தில் கிராமிய வங்கிகளாகச் செயற்பட்டு சேமிப்பில் மக்களை ஊக்குவித்து பெருந்தொகையான நிதியை வைத்துள்ளன என்று கூறினார்.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள் திரு. மா. கனகசபை, திரு மு. க. முருகையா, உட்பட கூட்டுறவாளர்கள்பலரும்ஞாபகார்த்த உரையாற்றினார்கள்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகளின் ஆசியுரையும இடம்பெற்றது,

# கூட்டுறவை தொழிலாகவும் சேவையாகவும் கருதவேண்டும்!

"கூட்டுறவில் கடமையை தொழிலாகவும், சேவையாகவும் கருதியமையினால்தான் கூட்டுறவுப் பணியாளர்கள் போர்க்காலங்களிலும் ஊரடங்கு வேளைகளிலும், சீரான உணவு விநியோகத்தை மேற்கொண்டு மக்களைப்பட்டினிச் சாவில் இருந்து காப்பாற்ற முடிகிறது"

இவ்வாறு யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. எம். கனகசபை யாழ். கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி மாணவர் ஒன்றுகூடலின் போது கூறினார்.

யாழ். கூட்டுறவுச் சபை மண்டபத்தில் மாணவர் மன்றத்தில் தலைவர் திரு. ச. கிருபாகரன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு எம். கனகசபை மேலும் பேசுகையி-;

பயிற்சி பெற்ற சங்கப்பணியாளர்கள் தாம் பணிபுரியும் சங்கங்களின் வளர்ச்சிக்கு பெற்ற பயிற்சியினை பயன்படுத்த வேண்டும் வெளிவாரி மாணவர்கள் வேறு வேலைகளுக்கு அலைந்து திரியாமல் கூட்டுறவில் இணைந்து மக்களுக்காக சேவையாற்ற முன்வரவேண்டும் என்றுகூறினார்.

மாவட்ட கூ. சபை செயலாளர் திரு எஸ். சிவசுப்பிரமணியம், கல்லூரி அதிபர் திரு பொ. சண்முகசுந்தரம் கூட்டுறவு ஆணையாளர்கள், திரு. மு. க. முருகையா, திரு. கே. பஞ்சலிங்கம், கூட்டுறவு அலுவலர்கள் திருமதி. யோ. செல்வரத்தினம், திரு. பொ. கணேசலிங்கம், மகளிர் விவகார உத்தியோகத்தர் திருமதி வே. செல்வரத்தினம் ஆகியோரும் உரையாற்றினார்கள்

யாழ். மாவட்ட கூட்டுறவு சபைக்கு மாணவர்கள் குத்துவிளக்கு ஒன்றை அன்பளிப்புச் செய்தனர்.

### கூட்டுறவுக் காப்பகம்

யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவு சபை கூட்டுறவு காப்பகம் ஒன்றை ஆரம்பிக்க தீர்மானித்துள்ளது.

இக்காப்பகத்தில் வைத்துப் பேணுவதற்கு சஞ்சிகைகள், கூட்டுறவுபற்றிய நூல்கள், கூட்டுறவு தொடர்பானசட்டம், துணைவிதிகள், கூட்டுறவுடன் தொடர்புடைய வேறு ஆவணங்கள், கூட்டுறவுச் சங்கங்களின் சுருக்கவரலாறு, எம்மத்தியில் வாழ்ந்துகொண்டிருக்கும் கூட்டுறவாளர்கள், அமரத்துவமான கூட்டுறவாளர்களின் கூட்டுறவு சேவை தொடர்பான வாழ்க்கை வரலாறு போன்றவற்றை எமக்கு தந்துதவுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*யாழ். மா. கூட்டுறவு சபை*

## செயலமர்வுக் கருத்தரங்கு

வடக்கு, கிழக்கு மாகாணத்திலுள்ள (யாழ். மாவட்டம் தவிர்ந்த) கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், செயலாளர்கள், மற்றும்கூட்டுறவுப் பணியாளர்களுக்கான செயலமர்வுக் கருத்தரங் ஒன்று திருகோணமலை மாவட்ட கூட்டுறவுச்சபை பண்டபத்தில் சபைத் தலைவர் திரு. இ. சோமசுந்தரம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

ஆறுதினங்கள் தொடர்ச்சியாக நடைபெற்ற இக்கருத்தரங்கில் இலங்கைமுகாமைச் சேவை நிறுவன உசாத்துணைவர் திரு சி. கோணேஸ்வரன் வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவுப் பயிற்சிக்கல்லூரி அதிபர் திரு. எஸ். அருளானந்தம் ஆகியோர் விரிவுரையாற்றினார்கள்.

## கூ. ஊழியர் நிரந்தர ஆணைக்குழு

நாடுபூராவும் உள்ள 40000 கூட்டுறவு பணியாளர்களின் நலன்களைப் பேணுவதற்கு நிரந்தரமான கூட்டுறவுசேவை ஆணைக்குழு ஒன்றை நியமிக்கப்போவதாக கூட்டுறவுத் துறை அமைச்சர் அமரசிறி தொடங்கொட அறிவித்துள்ளார்.

இவ்வாணைக்குழு நாடுமுழுவதற்கும் ஏற்ற முறையில், கூட்டுறவு ஊழியர்களின் நியமனம், இடமாற்றம் என்பவற்றைக் கவனிக்கவுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

1972ம் ஆண்டின் 12ம் இலக்கக் கூட்டுறவுப் பணியாளர் ஆணைக்குழுச் சட்டத்தின் பின்அதாவது 22 வருடங்களின் பின் இவ்நிரந்தர ஆணைக்குழு நியமிக்கப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## இடப்பெயர்ந்த நிலையிலும் சிறப்பாக இயங்குகிறது

"வலிவடக்கில் இடம் பெயர்ந்த நிலையில் உள்ள 74 சி. க. கூ. சங்கங்களில் தெல்லிப்பழை மேற்கு சி. க, கூ. சங்கம் சிறப்பாக இயங்கிவது இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும்."

தெல்லிடபழை மேற்கு சி. க. கூ. சங்கவருடாந்தப் பொதுக் கூட்டத்தில் வலிவடக்கு பிரதேச செயலரும், பிரதிக்கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருமான திரு. நா. வேதநாயகன் மேற்கண்டவாறு கூறினார் திரு. வை. குணாளன் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது மற்றும் கூட்டுறவுப் பரிசோதகர் திரு. எ. சின்னத்தம்பியும் உரையாற்றினார்.

### விசாரணைக் குழு

கடந்த காலங்களில் கூட்டுறவுச சங்கங்களில் இடம் பெறறதாகக் கருதப்படும் கூட்டுறவு ஊழியர்களது பிரச்சனைகள அதிகாரதுஸ் பிரயோகம், ஊழல்கள் சமமந்தமான விடயங்களை ஆராய்வதற்கு விசாரணைக் குழுக்கள் அமைக்கப்படுமென்று உள்நாட்டலுவல்கள், மாகாண சபை, கூட்டுறவுத்துறை அமைச்சர் அமரசிறி தொடங்கொட அறிவித்துள்ளார்.

*யாழ். செயலக திட்டமிடல் பகுதியினரால் வழங்கப்பட்ட இடம் பெயர்ந்தோருக்கான புரட்டாதி மாத முதல் இரு வாரங்களுக்குரிய (19 A முத்திரை) இலவச நிவாரணப் பொருள் விபரம் (இடம் பெயர்ந்தோர் நலன்கருதி பிரசுரிக்கப்பட்டுள்ளது)*

| பொருள் | விற்பனை விலை | 1 அங்கத். கி. கி. | 2 அங்கத். கி. கி. | 3 அங்கத். கி. கி. | 4 அங்கத்த கி. கி. | 5 அங்கத். கி. கி. |
|---|---|---|---|---|---|---|
| அரிசி | 19-40 | 2 | 4.500 | 6.000 | 8.000 | 10.500 |
| மா | 8-00 | 6.750 | 11 800 | 12 000 | 13.400 | 17.200 |
| சீனி | 30-50 | 1.450 | 2 400 | 3.425 | 4.00 | 5.750 |
| சி கடலை | 55-00 | — | 0.400 | | | |
| லக்ஸ்பிறே | 60 00 | | — | 1 பைக்கற் | 1 பைக்கற் | 1 பைக். |
| சல்லைட் | 7-25 | - | — | 1 தனி | 1 தனி | — |
| லக்ஸ் | 10-50 | 1 தனி | 2 தனி | 2 தனி | 3 தனி | 4 தனி |
| ரெக்சோனா | 9-75 | 1 தனி | 1 தனி | 1 தனி | 1 தனி | |
| ராணி | 10-50 | 1 தனி | | — | 1 தனி | 1 தனி |


## விளம்பர அன்பளிப்பு :

மானிப்பாய் பல நோ. கூட்டுறவு சங்கம்
மானிப்பாய்.

அளவெட்டி மல்லாகம்
பல. நோ. கூட்டுறவு சங்கம்
அளவெட்டி.

மானிப்பாய் ப. தெ. வ. அ. கூட்டுறவு
சங்கம்
மானிப்பாய்.

அச்சுவேலி ப. தெ. வ அ கூட்டுறவு
சங்கம்
அச்சுவேலி.

பண்டத்தரிப்பு ப. தெ. வ. அ.
கூட்டுறவு சங்கம்
பண்டத்தரிப்பு.


## பயிற்சி வகுப்பு

"மோசடிகளைத் தவிர்த்தலும் கண்டு பிடித்தலும்" என்னும் விடயம் சம்பந்தமான இரண்டு நாள் பயிற்சி வகுப்பொன்று வட பிரதேச மக்கள்வங்கி பிராந்திய தலைமை அலுவலகத்தில் மக்கள்வங்கி முகாமையாளர்களுக்கும் மற்றும் வங்கி உயரதிகாரிகளுக்கும் நடைபெற்றது,

மக்கள்வங்கி, பணியாளர் பயிற்சிக் கல்லூரி பிரதிப்பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் வட பிரதேச மக்க்ள் வங்கி முகாமையாளர் திரு. இ. அருளானந்தம், சட்டத்தரணி திரு. முத்துக்கிருஷ்ணன் யாழ். மாவட்டநீதிபதி திரு அன்ரண் பாலசிங்கம், இளைப்பாறிய பொலீஸ் அதிபர் திரு. இராசையா ஆகியோர் இப் பயிற்சியின் போது கருத்துரை வழங்கினார்கள்.

## அகதி அரிசி, சவர்க்காரம

*கந்தையா;-* என்னபரதேசியார் சங்கக்கடைக்கேபோறியள்

*பரதேசி:-* ஓ, உவை சங்கக்காரர் பேப்பரிலை மாத்திரம் போட்டிட்டினம். அங்கை போனா அரிசிக்கு 2 பை தா என்று கேக்கினம். பேப்பரிலை ஒரு அரிசி. சங்கக்கடையிலை இரண்டு அரிசி, சவர்க்காரங்களுக்கும் குறைவில்லை ... ... ...

*கந்தையா :-* அப்படி என்ன இரண்டு அரிசி ... ... ...

*பரதேசியார் :-* அரசாங்கம் திட்டம் போட்டுத்தான் கணக்காக தருகினம் ஒன்று குத்தரிசி, மற்றது நீட்டலும் உடையலும் கொஞ்சமாவும கலவன் பாருங்கோ. அகதிய விலை நல்லா குதிரைவிடுகினம.

*கந்தையா :-* ... ... ... ? ... ... ... ? ... ... ...?

*கூட்டுறவு —*

ஆயிரம் ரூபா, 30 வருடத்திற்கு 40ஆயிரம் ரூபா, 85 வருடத்திற்குள் 50 ஆயிரம் ரூபாவரை பெற்றுக் கொள்ள முடியும்.

குளிர்சுரம், செங்கண்மாரி, இருதயநோய், நீரழிவு, கண்கள் பெருத்தல்போன்ற நோய்களின் வைத்திய செலவுகளுக்காக ஆகக்கூடிய தொகையாக 1500/- 15% வட்டியுடன் வழங்கப்படுவதுடன் மூக்குக் கண்ணாடி பெற்றுக் கொள்ள 1000 ரூபாவும் பெற்றுக் கொள்ளமுடியும்.

*படித்ததை மறவாமல் ...*

சுருக்கமாய் சொல்ல வேண்டுமானால்.

1. திரும்பத்திரும்பப்படிப்பது.
2. திரும்பத்திரும்பக் கேட்பது.
3. படித்ததை, கேட்டதை எழுதிப் பார்ப்பது.

இவற்றில் உங்களால் செய்யக் கூடியது எதுவோ அதனைச் செய்வதற்கு முயற்சிசெய்து பாருங்கள்,

*தொகுப்பு: வா. வசிகரன்*
ஆண்டு 10.
யா / தெல் மகாஜனக்கல்லூரி

யாழ். மா. கூ. சபை அச்சகத்தில் அச்சிட்டு 14, மணிக்கூட்டுவீதி மா. கூ. சபையினரால் ஒக்ரோபர் மாதம் வெளியிடப்பட்டது.